<u>சுருக்கம்</u>

வெள்ளத்தடுப்பு பணி – திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கம் வட்டம், காவிரி ஆற்றின் இடதுகரை மைல் 119/0 முதல் 123/2 வரை தடுப்புச்சுவர் மற்றும் கான்கீரிட் சிலாப் பதிக்கும் பணி – ரூ.1.60 கோடி (ரூபாய் ஒரு கோடியே அறுபது இலட்சம் மட்டும்) நிருவாக ஒப்பளிப்பு – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**பொதுப்பணித் (என்2) துறை**

**அரசாணை (நிலை) எண்.266**

**நாள்: 15.12.2011**
**திருவள்ளுவர் ஆண்டு 2042**
**கார்த்திகை 29**

<u>படிக்கப்பட்டது</u>

1. தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை, திருச்சி மண்டலம் கடிதம் எண்.அரசு/வஅ4/கோ.36–3/பல/2011, நாள் 24.6.2011.
2. முதன்மைத் தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை கடிதம் எண்.எஸ்7(2)/29757/2008–2, நாள் 12.8.2011.

(((0)))

<u>ஆணை:</u>

மேலே பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட நீர்வள ஆதாரத்துறை, திருச்சி மண்டலத் தலைமைப் பொறியாளரின் கடிதத்தில் திருச்சிராப்பள்ளி மாவட்டம் ஸ்ரீரங்கம் நாட்டுவாய்க்கால் தலைப்பிலிருந்து ஸ்ரீரங்கம் அம்மா மண்டபம் வரை மைல் 119/0 முதல் 123/2 வரையில் ஏற்கனவே சுவர்கள் மட்டும் கட்டப்பட்டுள்ள 1800 மீட்டர் தொலைவிற்கு, கரையில் கான்கீரிட் சிலாப் பதிக்கும் பணிகளும், புதிதாக கட்டப்பட வேண்டிய 600மீ தொலைவிற்கு தடுப்புச்சுவர் மற்றும் அதன்மேல் கான்கீரிட் சிலாப் அமைக்கும் பணிகளும் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும், ஏற்கனவே செய்த பணிகள் போக இப்பணிகளையும் செய்து முடித்தால் ஸ்ரீரங்கம் பகுதிகள் அனைத்தும் முழுமையான அளவில் காவிரியின் வெள்ளத்தில் இருந்து பாதுகாக்கப்படும் என்றும் தெரிவித்து, காவிரி ஆற்றில் இடதுகரைப் பகுதிகளில், வெள்ளத்தடுப்புப் பணியாக, இடதுகரை மைல் 119/0 முதல் 123/2 வரை ஸ்ரீரங்கம் நாட்டுவாய்க்கால் தலைப்பு முதல் அம்மாமண்டபம் வரை 600 மீட்டருக்கு, கரைகளை பலப்படுத்த வெள்ளத் தடுப்பு சுவர்கள் அமைக்கவும், மைல் 119/0 முதல் 123/2 வரை 2400 மீட்டருக்கு கான்கீரிட் சிலாப் அமைக்கும் பணி ஆகியவற்றினை மேற்கொள்ளவும் ரூ.1.50 கோடி (ரூபாய் ஒரு கோடியே ஐம்பது இலட்சம் மட்டும்) நிதி ஒதுக்கீடு செய்து தரும்படி அரசினை கேட்டுக் கொண்டார்.

2. திருச்சி மண்டல தலைமைப் பொறியாளரின் கருத்துரு மீது மேலே பார்வை இரண்டில் படிக்கப்பட்ட முதன்மைத் தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை அவரது கடிதத்தில், திருச்சி மண்டல தலைமைப் பொறியாளர் 12.7.2011 நாளிட்ட கடிதத்தின் மூலம் இப்பணிக்கு ரூ.1.95 கோடிக்கு மதிப்பீட்டினை தயாரித்துள்ளார் என்றும், இம்மதிப்பீட்டில் ஸ்ரீரங்கம் நாட்டு வாய்க்கால் தலைப்பில் இருந்து ஸ்ரீரங்கம் அம்மா மண்டபம் வரையிலான மைல் 119/0 முதல் 123/2 வரையில் ஏற்கனவே தடுப்புச்சுவர் மட்டும் கட்டப்பட்ட 1800 மீட்டர் தொலைவிற்கு கரையில் கான்கீரிட் சிலாப் பதிக்கவும், புதியதாக 600 மீ தொலைவிற்கு தடுப்புச்சுவர் மற்றும் அதன்மேல் கான்கீரிட் சிலாப் அமைக்கவும் வழிவகை செய்யப்பட்டுள்ளன என்றும், மேற்படி மதிப்பீட்டில் சில திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு ரூ.1.70 கோடிக்கு இறுதி செய்யப்பட்டு நிருவாக ஒப்புதல் பெறும் பொருட்டு அரசுக்குப் பரிந்துரை செய்யப்படுகிறது என்றும் தெரிவித்துள்ளார்.

3. மேலே இரண்டில் படிக்கப்பட்ட நீர்வள ஆதாரத்துறை முதன்மைத் தலைமைப் பொறியாளர் கருத்துருவினை அரசு கவனமாக பரிசீலனை செய்து, மதிப்பீட்டில் சில திருத்தங்களுடன் அதனை ஏற்று, திருச்சி மாவட்டம் ஸ்ரீரங்கம் வட்டம், காவிரி இடதுகரை மைல் 119/0 முதல் 123/2 வரை, அதாவது ஸ்ரீரங்கம் நாட்டு வாய்க்கால் தலைப்பு முதல் ஸ்ரீரங்கம் அம்மா மண்டபம் வரை உள்ள வலுவிழந்த கரை மற்றும் பகுதிகளை வலுப்படுத்த, ஏற்கனவே தடுப்புச்சுவர் மட்டும் கட்டப்பட்ட 1800மீ தொலைவிற்கு கரையில் கான்கிரீட் சிலாப் அமைப்பதற்கும் புதிதாக 600 மீ தொலைவிற்கு

/த.பி.பா/

தடுப்புச்சுவர் மற்றும் அதன் மேல் கான்கிரீட் சிலாப் அமைப்பதற்கும் ரூ.1.60 கோடி (ரூபாய் ஒரு கோடியே அறுபது இலட்சத்திற்கு மட்டும்) நிருவாக ஒப்பளிப்பு வழங்கி அரசு ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி மூன்றில் ஒப்பளிப்பு வழங்கப்பட்ட பணிக்கான செலவினம் பின்வரும் கோரிக்கை எண்.40–01–ன் கீழ் துவக்கப்பட்டுள்ள புதிய கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும். "4711 – வெள்ளக்கட்டுப்பாட்டு திட்டம் குறித்த மூலதனச் செலவு – 01 வெள்ளக்கட்டுப்பாடு – 103 சிவில் பணிகள் KW. திருச்சி மாவட்டம், ஸ்ரீரங்கம் தாலுக்காவில் காவிரி ஆற்றில் வெள்ள தடுப்பு பணிகள்/தடுப்பு சுவர் / சிலாப் பதித்தல் ஆகிய பணிகளை மேற்கொள்ளுதல் 16 பெரும் பணிகள்" (கு.தொ.கு.4711–01–103–KW–1606).

5. மேலே பத்தி நான்கில் துவக்கப் பெற்ற புதிய கணக்குத் தலைப்பிற்கு முதன்மை தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை அவர்கள், மதிப்பீடு, கணக்கு நேரமைப்பு மற்றும் கட்டுப்பாட்டு அலுவலர் ஆவார்.

6. சம்பந்தப்பட்ட சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர்/மாவட்ட கருவூல அலுவலர் மேற்கண்ட புதிய கணக்கு தலைப்பினை தங்கள் கணக்குகளில் துவக்கிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7. மேலே பத்தி மூன்றில் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள செலவினம் ஒரு "புதுப்பணி" (New Service) குறித்த செலவினமாகும். இதற்கான சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். சட்டமன்றப் பேரவையின் ஒப்புதலை எதிர்நோக்கி, இச்செலவினம் முதலில் எதிர்பாரா செலவு நிதியிலிருந்து (Contingency Fund) முன்பணமாக பெற்று மேற்கொள்ளப்படும். இதற்கான ஆணை நிதி (வ.செ.பொது–I) துறையிலிருந்து தனியாக வெளியிடப்படும். எதிர்பாரா செலவு நிதியிலிருந்து முன்பணம் ஒப்பளிப்பு உரிய படிவத்தில், இவ்வரசாணையுடன் நிதி (வ.செ.பொது–I) துறைக்கு விண்ணப்பிக்குமாறு, முதன்மைத் தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும், இச்செலவினத்தை துணை மானியக் கோரிக்கை 2011–2012ல் (Supplementary Estimates 2011-2012) சேர்க்கும் பொருட்டு, உரிய செயற்குறிப்பினை உரிய நேரத்தில் நிதித்(வ.செ.பொது–I)துறைக்கு அனுப்புமாறும் முதன்மைத் தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

8. இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா.எண்.63663/PW-I/2011, நாள் 13.12.2011 மற்றும் கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.1076 (ஆயிரத்து எழுபத்து ஆறு) உடன் வெளியிடப்படுகிறது.

**//ஆளுநரின் ஆணைப்படி//**

**எம். சாய் குமார்,**
**அரசு செயலாளர்.**

பெறுநர்
முதன்மை தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை, சென்னை – 5.
தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை, திருச்சி மண்டலம், திருச்சி – 20.
மாநில கணக்காயர் (A&E / Audit-I), சென்னை – 18.
மாவட்ட ஆட்சித் தலைவர், திருச்சி.
மாவட்ட கருவூல அலுவலர், திருச்சி.
நகல்
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் செயலாளர், சென்னை 9.
அமைச்சர் (நிதி) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை –9.
அமைச்சர் (பொதுப்பணி) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை –9.
சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை–9.
நிதி (பொ.ப.II) / வ.செ.(பொ.I/பொ.II) துறை, சென்னை–9.
இ.கோ/உ.ந

**// ஆணைப்படி / அனுப்பப்படுகிறது //**

**பிரிவு அலுவலர்**